# CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE

# මැතිවරණ ප්‍රචණ්ඩත්වය නිරීක්ෂණ මධ්‍යස්ථානය

# தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்

105 - 5th Lane, Colomo - 03, Sri Lanka
Tel: +94 11 2564404, Fax: +94 11 4722632
E-mail: cmev@cpalanka.org Website: http://cmev.wordpress.com


## தென்மாகாண சபைத் தேர்தல் - 2009

### ஊடக அறிக்கை இல - 01

### 2009 – செப்டெம்பர் 26

**பின்னணி**

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் தென்மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் பணிகளை ஆரம்பித்துள்ளது. 20 கண்காணிப்பாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். நான்கு பேர் அம்பந்தோட்டையிலும் ஏழு பேர் மாத்தறையிலும் ஒன்பது பேர் காலி மாவட்டத்திலும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் தேர்தலுக்கு முன்னரும் பின்னரும் தேர்தல் நடவடிக்கைகளை கண்காணிப்பர். தேர்தல் தினத்தன்று கண்காணிப்பு பணிகள் 10 நடமாடும் குழுக்களால் மேற்கொள்ளப்படும். தெரிவுசெய்யப்பட்ட வாக்குச்சாவடிகளில் கண்காணிப்பாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்படுவர்.

தென்மாகாணச்சபை 2009 ஆகஸ்ட் 03ம் திகதி 1613/1 இலக்க வர்த்தமாணி அறிவித்தல் மூலம் கலைக்கப்பட்டதில் இருந்து தேர்தல் பிரசாரம் ஆரம்பமானது. 2009 ஆகஸ்ட் 29 முதல் 28 வரை வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் தேர்தல் பிரசாரப் பணிகள் சூடுபிடிக்க ஆரம்பித்தது.

இத்தேர்தலில் தென்மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களிலும் 52 அரசியல் கட்சிகளையும் சுயேச்சை குழுக்களையும் சேர்ந்த 1091 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். தென்மாகாண சபையின் உறுப்பினர் எண்ணிக்கை 55 ஆகும்.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தை சேர்ந்த குழுவொன்று 2009 செப்டெம்பர் 17ம் திகதிமுதல் 19ம் திகதி வரை இம் மூன்று மாவட்டங்களுக்கும் விஜயத்தை மேற்கொண்டது. இக்குழு ஐ.ம.சு.மு, ஐ.தே.க மற்றும் ஜே.வி.பி கட்சி அலுவலகங்களுக்கு சென்று அங்கிருந்த கட்சிக் குழு தலைவர்களுடனும் இணைப்பாளர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தியது.

உதவித்தேர்தல் ஆணையாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் அதிகாரிகளுடனும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களுடனும் பேச்சு வார்த்தை நடத்தி தேர்தல் சட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்தவேண்டியது குறித்தும் பேச்சு வார்த்தை நடத்தியது.

**நிலைமை தொடர்பான ஆய்வு**

மூன்று மாவட்டங்களிலும் தேர்தல்கள் தொடர்பான வன்முறைச் சம்பவங்கள் மிகக் குறைவாக காணப்படுகின்றன. குறிப்பாக உக்கட்சிப்பூசல்கள் அதிகமாக காணப்படுகின்றன. ஐ.ம.சு.முன்னணி வேட்பாளர்களுக்கிடையே குறிப்பிடத்தக்களவு உட்கட்சி மோதல்கள் இடம்பெற்றுள்ளன. ஆளும் முன்னணி அரச சொத்துக்களை முறையற்ற வகையில் இத் தேர்தலில் பாவிப்பதை

காணக்கூடியதாக உள்ளது. ஆளும்கூட்டணிக்கட்சிகள் பொலிஸாரின் நடவடிக்கை குறித்து திருப்தி தெரிவித்துள்ளன. இருந்தும் எதிர்க்கட்சிகள் சுவரொட்டிகள் தொடர்பாகவும் உத்தியோகபூர்வமற்ற கட்சி அலுவலகங்கள் தொடர்பாகவும் பொலிஸார் மீது அதிருப்தி தெரிவிக்கின்றன.

சுவரொட்டிகள் கட்-அவுட்டுகள், பதாதைகள் ஆகியவற்றை ஆளும்கட்சி ஆதரவாளர்கள் பொது இடங்களில் வைத்திருப்பதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. தேர்தல் சட்டவிதிகளை நடைமுறைப்படுத்துவதில் பொலிஸார் தங்களது கடமைகளை முறையாக மேற்கொள்ளவில்லை எனவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. மாகாணசபைத் தேர்தல்கள் சட்டமூலம் 1988 பிரிவு 74 இலக்கம் 02 சட்டங்களின்படி பொது இடங்களில் துண்டுப்பிரசுரங்களை விநியோகிப்பது சுவரொட்டிகளை ஒட்டுவது குற்றமாகும். பொலிஸார் தமது கடமைகளை முறையாக மேற்கொள்ள வளங்கள் பற்றாக்குறை நிலவுவதாகவும் தேர்தல் திணைக்களம் பொது இடங்களில் சுவரொட்டிகளை அகற்ற பொலிஸாருக்கு போதிய வளங்களை வழங்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் தேர்தல் பிரசாரங்களின் போது பொதுவளங்களை துஷ்பிரயோகம் செய்ய வேண்டாம் எனவும் தேர்தல் சட்டவிதிகளை மீறவேண்டாம் எனவும் சகல அரசியல் கட்சிகளையும் கேட்டுக்கொள்கின்றது. தென்மாகாண மக்கள் தமது வாக்குரிமையை சுதந்திரமாக பாவிக்க அனுமதிக்க வேண்டுமெனவும் பொதுவளங்களை துஷ்பிரயோகம் செய்வதை தடுக்கும்படியும் வாக்காளர்கள் சுதந்திரமாக வாக்களிக்க வசதிசெய்து கொடுக்கும்படியும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கேட்டுக்கொள்கின்றது.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) 1997 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. இந்நிறுவனம், மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் (CPA), சுதந்திர ஊடக இயக்கம் (FMM) மற்றும் INFORM மனித உரிமைகள் தொடர்பான ஆவணப்படுத்தல் நிலையம் ஆகிய நிறுவனங்களின் ஒன்றியமாகும். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையத்தின் செயலகமாக செயற்படுகின்றது.

துஷித்த சிறிவர்தன (சட்டத்தரணி)
தேசிய இணைப்பாளர்.